**<u>செய்தி வெளியீடு எண்.010</u>** <u>நாள்.4.1.2008</u>

# ஆன்றோர் மன்றக் குழு கூட்டம்

தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக 2008 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றக் கூட்டம் 4.1.2008 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை தலைமைச் செயலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள் தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆர்.ராணி அவர்கள் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை செயலர் திரு வ.கனகராஜ்,இ,ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு தங்க கலியபெருமாள்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு மாலிக் பெரோஸ்கான்,இ.ஆ.ப., அரசு உயரதிகாரிகள் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த ஆன்றோர் மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஆன்றோர் மன்றத்தினை திருத்தியமைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதலில் அனைத்து உறுப்பினர்களும் நன்றி தெரிவித்தனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பழங்குடியின மக்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசு அதிகாரிகளிடம் அப்பிரச்சினைகள் குறித்து விவாதித்து உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.